சிறப்புநிலை அலுவலகம்
வெள்ளலூர் பேரூராட்சி
கோயம்புத்தூர்

ந.க.எண். 44/2026 நாள். 09.01.2026

சான்று

கோயம்புத்தூர் மாவட்டம் மதுக்கரை வட்டம் வெள்ளலூர் தி/வா பிரசன்னா இன்ப்ரா எல்.எல்.பி அவர்களால் வெள்ளலூர் கிராமம் க.ச.எண்கள்.964/1, 964/2, 965/3A, 967/6, 959/1B மற்றும் 960/1ல் 14.33 ஏக்கர் கொண்ட இடத்தில் 216 மனைப்பிரிவு அமைப்பதற்கு நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களால் DTCP No 119/2025. நாள்–18.11.2025 எண்ணிட்டு மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் அடிப்படை வசதி பணிகள் அமைக்கப்பட்டுள்ளது. அமைக்கப்பட்ட பணிகள் மேற்கண்ட DTCP No 119/2025. நாள்–18.11.2025ன்படி தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுள்ளது என சான்றளிக்கப்படுகிறது.

VELLALORE SPECIAL GRADE TOWN PANCHAYAT
COIMBATORE DISTRICT

செயல் அலுவலர்,
வெள்ளலூர் பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம்.

பெறுநர்

திருவாளர்.பிரசன்னா இன்ப்ரா எல்.எல்.பி,
எண்.730/1, ராம்ஸ்குடில்,
PPR பூமி எதிரில்,
அவிநாசி சாலை,
கோயம்புத்தூர்–641018.

PRESSANA
INFRA LLP

info@pressanagroup.com
www.pressanagroup.com

14.01.2026

பெறுநர்

தமிழ்நாடு கட்டட மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமம் (TNRERA),
எண்.133, G-பிளாக்,
முதல் நிழற்சாலை, அண்ணாநகர் (கிழக்கு),
சென்னை – 600102.

ஐயா,

வணக்கம்!

பொருள் :- RERA அனுமதி விண்ணப்பம் எண். TNRERA/PLP/9228/2025
வழங்குதல் சம்பந்தமாக.

நாங்கள் கோவை மாவட்டம், மதுக்கரை வட்டம், வெள்ளலூர் கிராமம், க.ச. எண்கள். 943/1A, 944/1, 947/1, 959/1B, 960/1, 964/1, 964/2, 965/3A, 965/4, 966/1A & 967/6 –ல் கட்டுப்பட்ட 5.80.10 ஹெக்டேர் அல்லது 14.33 ஏக்கர் இடத்தில் DTCP–ன் ROC No.CBELPA/IY2P0FLN/2025/2025/TCP நாள் 18.11.2025 (ம.வ/ந.ஊ.இ.எண்:119/2025) திட்ட அனுமதி ஆணையின்படியும், வெள்ளலூர் பேரூராட்சின் செயல் அலுவலர் அவர்களின் குடியிருப்பு மனைப்பிரிவு அங்கீகார உத்தரவு எண். Roc No. 1501/2025–ன் படியும், இறுதி குடியிருப்பு மனைப்பிரிவு ஒப்புதல் செய்யப்பட்டு/மனைப்பிரிவு அங்கீகாரம் பெறப்பட்டு, மனைப்பிரிவுகள் அமைத்துள்ளோம். மேலும் எங்களது இடத்திற்கு கிழப்புறம் மற்றும் மேற்புறம் பக்கத்தில் எந்தவித நீர் ஓடைகளும் இல்லை, இருப்பினும் நாங்கள் WRD நீர்வளத்துறையின்படி எங்களுக்கு வழங்கப்பட்ட தடையின்மை சான்று எண். வப/இவஅ.3/கோ.73/746எம்/2025 நாள் 21.08.2025-ன் படி பரிந்துரைக்கப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் அடிப்படை வசதிகள் முழுவதுமாக நாங்கள் செயல்படுத்தி, PROVISION கொடுத்ததுள்ளோம்.

PRESSANA INFRA LLP

No.730/1, Rams kudil, Opp.PRS Ground, Behind
Mahajan Collection, Avinashi Road, Coimbatore - 641 018.
GST: 33ABDFP5453E1ZG

PRESSANA
INFRA LLP

info@pressanagroup.com
www.pressanagroup.com

நிபந்தனை பணிகள் முழுவதையும் நினைவேற்றி உள்ளதற்கான சான்று ந.க.எண். 44/2026 நாள் 09.01.2026 வெள்ளலூர் பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களிடம் பெற்று தங்களின் பார்வைக்கு சமர்பித்துள்ளோம். எனவே தாங்கள் தயவு கூர்ந்து இக்கடிதத்தை ஏற்றுக் கொண்டு எங்களுக்கு RERA அனுமதி வழங்குமாறு மிகவும் பணிவுடன் வேண்டி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி!

இப்படிக்கு,

தங்கள் உண்மையுள்ள,

PRESSANA INFRA LLP

(நிறுவனத்தின் பங்குதாரர்)

திரு. S. அனிஷ் பிரசன்னா

No.730/1, Rams kudil, Opp.PRS Ground, Behind
Mahajan Collection, Avinashi Road, Coimbatore - 641 018.
GST: 33ABDFP5453E1ZG

நீர்வளத்துறை

அனுப்புநர்

பொறி.க.அருள் அழகன்,பி.இ.,
செயற்பொறியாளர்,நீவது.,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் – 638 451.

பெறுநர்

தி/வா.பிரசன்னா இன்ப்ரா எல்.எல்.பி,
எண்.730/1,ராம்ஸ்குடில்,
PRS பூமி எதிரில்
அவிநாசி சாலை,
கோயம்புத்தூர் – 641 018.

கடித எண்.வப / இவஅ.3 / கோ.73 / 746 / 2025 / நாள்.21.08.2025

அய்யா,

பொருள் தடையின்மை சான்று - கோயம்புத்தூர் மாவட்டம் – மதுக்கரை வட்டம் – வெள்ளலூர் கிராமம் –தி/வா.பிரசன்னா இன்ப்ரா எல்.எல்.பி,கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட பூமிகளில் - க.ச.எண்கள்.964/1, 964/2, 965/3A, 967/6, 959/1B, மற்றும் 960/1-க்கு அருகில் செல்லும் நொய்யல் ஆறு மற்றும் வாய்க்கால் உள்ளதால் குறிப்பிட்ட இடைவெளிக்கு அப்பால் கட்டிட பணிகள் மேற்கொள்ள நீர்வளத்துறையின் சான்று வழங்குதல் - தொடர்பாக.

பார்வை

1. தங்களின் நிறுவனத்தால் TamilNadu Single Window Portal for Planning Permission (DTCP) இணையதளத்தில் விண்ணப்பம் பதிவேற்றம் செய்யப்பட்ட நாள்.06.08.2025. (இவ்வலுவலகத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட நாள்.07.08.2025.
2. உதவிசெயற்பொறியாளர், நீவது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண்.கோ.58 / 2025 / நாள்.20.08.2025.

****

பார்வை 1-ல் காணும் தங்களின் விண்ணப்பத்தின்படியும்,பார்வை 2-ல் காணும் உதவி செயற்பொறியாளர்.நீ.வது, பாசன உபகோட்டம், கோயம்புத்தூர் அவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், வெள்ளலூர் கிராமத்தில் தி/வா.பிரசன்னா இன்ப்ரா எல்.எல்.பி, கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு பாத்தியப்பட்ட க.ச.எண்கள்.964/1, 964/2, 965/3A, 967/6, 959/1B, மற்றும் 960/1-ல் உள்ள பூமிகளில் மனைப்பிரிவு அமைப்பதற்கு கீழ்க்காணும் பொது நிபந்தனைகளின் அடிப்படையிலும், ஆணையாளர், நகர மற்றும் கிராம திட்டமிடல், சென்னை அவர்களின் சுற்றறிக்கை Roc.No.4367 / 2019-BA2 நாள்.13.03.2019-ன் படி கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடைவெளிக்கு அப்பால் (Set back) பணிகள் மேற்கொள்ளலாம் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

(தபியா)

Scanned with OKEN Scanner

வ. எண்	க.ச.எண்கள்	அருகில் செல்லும் நீர்நிலையின் வகை	பட்டா நிலத்திற்கும் அருகில் செல்லும் நீர்நிலைக்கும் இடைப்பட்ட தூரம்
1	964/1, 964/2, 965/3A,	நொய்யல் ஆறு	15.00 மீட்டர்
2	967/6, 959/1B, 960/1	வாய்க்கால் (1மீ அகலத்திற்கு மேல்)	3.00 மீட்டர்
3	965/4, 966/1A, 947/1A, 944/1, 943/1A	ஏதுமில்லை	---

நிபந்தனைகள்

1) கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், வெள்ளலூர் கிராமம் க.ச.எண்கள். 964/1, 964/2, 965/3A-க்கு அருகில் செல்லும் நொய்யல் ஆறு மற்றும் க.ச.எண்கள். 967/6, 959/1B, 960/1-க்கு அருகில் செல்லும் வாய்க்காலினை தங்களது சொந்த செலவில் நில அளவை செய்து ஆறு மற்றும் வாய்க்காலில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யாமல் ஆற்றின் வெளிப்புற எல்லையிலிருந்து 15.00 மீட்டர் இடைவெளி விட்டும் மற்றும் வாய்க்காலின் வெளிப்புற எல்லையிலிருந்து 3.00 மீட்டர் இடைவெளி விட்டு கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.
2) கோயம்புத்தூர் மாவட்டம், மதுக்கரை வட்டம், வெள்ளலூர் கிராமம் க.ச.எண்கள். 964/1, 964/2, 965/3A-க்கு உள்ள தங்களுக்கு பாத்தியப்பட்ட பூமிகளில் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களின் அடித்தளம் (Basement) பூமி மட்டத்திலிருந்து 2.00 மீட்டர் உயரத்தில் அமைக்கப்பட வேண்டும்.
3) மேற்படி பூமிகளில் புதிதாக கட்டப்படும் கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கழிவுநீர் அருகில் உள்ள ஆறு மற்றும் வாய்க்காலில் சேராதவாறு கழிவுநீர் வாய்க்கால் மற்றும் சுத்திகரிப்பு நிலையம் இடைப்பட்ட தூரத்திற்கு அப்பால் தங்களது பூமியின் எல்லைக்குள் அமைக்கப்பட வேண்டும். மேலும், கழிவுப்பொருட்களை வாய்க்கால் (அ) ஆற்றில் கொட்டி நீரோட்டத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தக்கூடாது.
4) தங்கள் பூமிகளுக்கு அருகாமையில் உள்ள ஆறு மற்றும் வாய்க்காலில் ஆக்கிரமிப்புகள் செய்வதோ மற்றும் பாதை அமைக்கவோ கூடாது.
5) ஆறு மற்றும் வாய்க்காலின் நீரோட்டத்திற்கு தடை ஏற்படுத்தும் வகையில் எவ்வித கட்டுமானப் பணிகளும் மேற்கொள்ளக்கூடாது.
6) இயற்கை இன்னல்களால் மற்றும் வெள்ளப்பெருக்கால் ஏற்படும் இடர்பாடுகளுக்கு இத்துறை பொறுப்பேற்காது.

(தபியா)

Scanned with OKEN Scanner

7) உள்ளூர் திட்டகுழுமத்திடம் தடையின்மைச்சான்று பெற மட்டுமே இவ்வனுமதி பொருந்தும். ஆதலால், தாங்கள் வேறு உபயோகத்திற்கு இவ்வனுமதியை பயன்னடுத்தக் கூடாது.

8) இவ்வனுமதியை மனைப்பிரிவு அமைப்பதற்கு வழங்கும் தடையின்மைச்சான்று என கருதக்கூடாது.

9) அட்டவணையில் குறிப்பிட்டுள்ள அரசு நிர்ணயிக்கப்பட்ட இடைவெளியில் (Setback) கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளது என பின்னாளில் தெரிய வந்தாலோ அல்லது நீர்நிலைகளில் ஆக்கிரமிப்பு இருப்பது தெரிய வந்தாலோ, தடையின்மைச்சான்றை இரத்து செய்ய உள்ளூர் திட்ட குழுமத்திற்கு பரிந்துரை செய்யப்படும்.

21/2/25

செயற்பொறியாளர்நீவது,
பவானிசாகர் அணைக்கோட்டம்,
பவானிசாகர் - 638 451.

21/2/25

Scanned with OKEN Scanner